ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2359/17 - 2023 නොවැම්බර් මස 22 වැනි බදාදා - 2023.11.22

*2359/17 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 22 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### காடு பேணற் கட்டளைச் சட்டம்

*1966 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 1979 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 1982 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 1988 ஆம் ஆண்டின் 84 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 1995 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 2009 ஆம் ஆண்டின் 65 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்ட 1966 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க (451 ஆவது அத்தியாயமான) காடு பேணற் கட்டளைச் சட்டத்தின் 64. (1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 4(2) ஆம் பிரிவின் கீழான கட்டளை.*

கட்டளை

(451 ஆவது அத்தியாயமான) காடு பேணற் கட்டளைச் சட்டத்தின் 4(2) ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் வனசீவராசிகள் மற்றும் வனவளப் பாதுகாப்பு அமைச்சரான சட்டத்தரணி பவித்ரா வன்னிஆரச்சி ஆகிய நான், 2012 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 06 ஆந் திகதி வெளியிட்ட 1787/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மூலம் ஒதுக்குக் காடாகப் பிரகடனப்படுத்தப்பட்ட குருகொடவத்த ஒதுக்கத்திலிருந்து பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லைக்குள் அமைந்துள்ள 2.0235 ஹெக்டயார் விஸ்தீரணத்தைக் கொண்ட பகுதியை 2023 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் ஒதுக்கத்திலிருந்து விடுவிக்கின்றேன்.

சட்டத்தரணி **பவித்ரா வன்னிஆரச்சி**,
வனசீவராசிகள் மற்றும் வன வளப் பாதுகாப்பு அமைச்சர்.

வனசீவராசிகள் மற்றும் வன வளப் பாதுகாப்பு அமைச்சு,
ராஜகிரிய,
2023, நவெம்பர் 21.

1A - G 40800 — 56 (2023/11)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

*இலங்கை ஊவா மாகாணத்தின் பதுளை மாவட்டத்தில் மீகஹகிவுல பிரதேச செயலாளர் பிரிவில் 22A, பலகொல்ல கிராம அலுவலர் பிரிவின் அக்கலாஉல்பத்த கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் அதிபதியினால் 2023 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 08 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட B/MGH/2023/1020 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள துண்டு இலக்கம் A எனக் குறிப்பிடப்பட்டுள்ள தலாவதென்ன எனும் காணியின் ஒருங்கிணைந்த மொத்தப் பரப்பளவு 2.0235 ஹெக்டயார் விஸ்தீரணத்தில் அமைந்துள்ளதும் பின்வரும் எல்லைகளைக் கொண்டதுமான அரசாங்கக் காணியாகும்.*

துண்டு இலக்கம் A - தலாவதென்ன காணி :

*வடக்கு : எப். வீ. பீ. 614 இன் துண்டு இலக்கம் 178 (பகுதி) மற்றும் துண்டு இலக்கம் B பாதைக்காக ஒதுக்கப்பட்ட பகுதி ;*
*கிழக்கு : துண்டு இலக்கம் B மற்றும் எப். வீ. பீ. 614 இன் துண்டு இலக்கம் 178 (பகுதி) ;*
*தெற்கு : எப். வீ. பீ. 614 இன் துண்டு இலக்கம் 178 (பகுதி) ;*
*மேற்கு : எப். வீ. பீ. 614 இன் துண்டு இலக்கம் 178 (பகுதி).*

*விஸ்தீரணம் (ஹெக்.) : 2.0235*

EOG *11-0218*